**கொடுக்கப்பட்ட உறவுக் கடிதத்தை நிறைவு செய்க.**

64, ஜாலான் கருடன்,
தாமான் மெலூர்,
25000 கோத்தா பாரு,
கிளந்தான்.

29.09.2020

பேரன்புமிக்க அத்தை அவர்களுக்கு,

வணக்கம். ______ அங்கு உங்கள் அனைவரின் நலமறிய ஆவல். ______

நேற்றுதான் வீடு திரும்பினாள். உடல் எடை கூடுதலினால் அருள்மொழிக்கு ______ ஏற்பட்டது. மருத்துவர்கள் அவளை நன்கு பரிசோதித்தனர். உடல் பருமன்தான் மூச்சுத் திணறலுக்குக் காரணம் என்றனர்.

அருள்மொழி அடிக்கடி ______ குளிர்பானங்கள் ஆகியவற்றை விரும்பிச் சாப்பிடுவாள் என்பது உங்களுக்குத்தான் தெரியுமே! ______ உறுதிபட அறிவுரை கூறி உள்ளனர்.

மேலும், தொடர்புச்சாதனங்களான தொலைக்காட்சி, கணினி, இணையம் போன்றவற்றைப் பயன்படுத்தும் காரணத்திற்காக அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பதும் தவறு என்றனர். ______ உடல் பயிற்சி செய்வது அவசியம் என்றும் கூறினர். தொலைக்காட்சி, முகநூல், இணையம் ஆகியவற்றைப் பார்த்தபடி சாப்பிடுவதும் கூடாது என்று அறிவுரை கூறினர்.

மருத்துவர் கொடுத்த அனைத்து ______ பயனுள்ளவையாகவே இருந்தன. இனி, நானும் மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்வேன். நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். அருள்மொழி இப்போது ______

விரைவில் நாங்கள் அனைவரும் உங்களைக் காண வருவோம். மாமாவை நலம் விசாரித்ததாகக் கூறவும். ______

______

இப்படிக்கு,
*க. தமிழ்மாறன்*

LIVEWORKSHEETS

க. தமிழ்மாறன்,

நன்றி.

சென்ற வாரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தங்கை அருள்மொழி

நாங்கள் இங்கு நலமாக இருக்கிறோம்.

மூச்சுத் திணறல்

மீண்டும் அடுத்த மடலில் சந்திக்கின்றேன்.

அவளின் உணவுப் பழக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று மருத்துவர்கள்

விளக்கங்களும் அறிவுரைகளும் மிகவும்

தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது விளையாடுவது,

நொறுக்குத் தீனி, துரித உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு,

குணமாகி நலமாக இருக்கிறாள்.

LIVEWORKSHEETS